**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி /நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை : செல்வி. G.பவித்ரா, L.L.M.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்கரன்கோவில்.**

**நீதித்துறை நடுவர், சங்கரன்கோவில் (மு.கூ.பொ)**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 07-ம் தேதி சனிக்கிழமை**

**Cr.M.P.No. 302/2026**

சங்கரன்கோவில் தாலுகா காவல் நிலைய குற்ற எண். 26/2026

மனு நாள் 03.03.2026 பிரிவு 503 பி.என்.எஸ்.எஸ்.

முத்துக்கிருஷ்ணன்,
த/பெ. பரமசிவன்

.....மனுதாரர் / வாகன உரிமையாளர்

/எதிர்/

காவல்துறை உதவி ஆய்வாளர்,
சங்கரன்கோவில் தாலுகா காவல் நிலையம்

..... எதிர்மனுதாரர்

மனு மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அரசு தரப்பில் பதில் பெறப்பட்டது.

மனுதாரர் தரப்பில், மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட வாகன எண். TN 76 AT 0178 என்ற எண் கொண்ட TVS Radeon இருசக்கர வாகனத்தை எதிர்மனுதாரர் காவல் நிலையத்தினரால் குற்ற எண். 26/2026 பிரிவுகள் 296(b), 132, 109, 351(3) BNS 27(1) Arms Act வழக்கு பதிவு செய்யப்பட்டு சமூக நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றும், மேற்படி வாகனத்திற்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும், மேற்படி மனுதாரரின் வாகனம் எதிர்மனுதாரரால் கைப்பற்றப்பட்டு பி.ஆர்.எண்.101/2026 என நம்பர் செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலில் இருந்து வருகிறது என்றும், எனவே, மேற்படி மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட TN 76 AT 0178 என்ற பதிவெண் கொண்ட TVS Radeon என்ற இருசக்கர வாகனத்தை மனுதாரரிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும், இல்லாவிடில் பல கஷ்ட நஷ்டங்கள் ஏற்படக்கூடும் என்றும், மனுதாரரிடம் ஒப்படைக்கும்பட்சத்தில் தகுந்த ஜாமீன்தார் வழங்க தயாராக உள்ளதாகவும், மேற்படி வாகனத்தை நீதிமன்ற பிணையில் பெற்று சென்ற பின்பு அதை உருமாற்றம் செய்யவோ, விற்பனை செய்யவோ மாட்டேன் என்றும், சமூக நீதிமன்றம் உத்தரவிற்கு கட்டுப்பட்டு நடப்பதாகவும், மேலும், மனுதாரர் தரப்பில் கூடுதல் அபிடவிட் தாக்கல் செய்யப்பட்டு, அதில் மனுதாரரின் மேற்படி இருசக்கர வாகனத்தை அவரது சொந்த ஊரான ஊத்துமலையிலிருந்து அவரது அனுமதியில்லாமல் இவ்வழக்கின் எதிரிகள் இருவரும் சாப்பாடு வாங்குவதற்காக எடுத்துச் சென்றதாக தெரிவித்துள்ளதாகவும், எனவே, மேற்படி வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க வேண்டுமென்றும், ஒப்படைவு செய்ய வேண்டி வாதிடப்பட்டது.

எதிர்மனுதாரர்/அரசு தரப்பில், கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலைய குற்ற எண். 26/2026 வழக்கில் கண்ட சொத்தான TN 76 AT 0178 என்ற பதிவெண் கொண்ட TVS Radeon என்ற இருசக்கர வாகனத்தை இந்நீதிமன்றத்தில் பி.ஆர்.எண். 101/2026 பிரகாரம் பெறப்பட்டு நிலைய பாதுகாப்பில் பாதுகாப்பாக இருந்த வருகிறது என்றும், நீதிமன்றம் உத்தரவிடும்பட்சத்தில் மேற்படி வழக்கின் சொத்தை தர தயாராக உள்ளதாகவும், மேலும், வழக்கின் சொத்தை தரும்பட்சத்தில் திரும்ப திரும்ப இதுபோன்றன குற்றச் செயல்களில் வாகனத்தைக் கொண்டு ஈடுபடக்கூடும் என்பதாலும், மேலும், வழக்கின் விசாரணைக்கு உட்படுத்தாமல் வாகனத்தை விற்கவோ, அடமானம் வைக்கவோ அல்லது உருமாற்றவோ அல்லது தொடர்ந்து தலைமறைவாகவோ செய்துவிடுவார் என்பதாலும், வழக்கிற்கு ஆஜர்படுத்த முடியாமல் வழக்கின் விசாரணைக்கு ஆஜர்படுத்த முடியாமல் போகக்கூடும் என்பதாலும், வாகனத்தினை கொடுப்பதற்கு கடுமையான ஆட்சேபனை செய்வதாக எடுத்துரைக்கப்பட்டது.

மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. பி.ஆர்.எண்.101/2026-ல் கண்ட சொத்தான. TN 76 AT 0178 என்ற பதிவெண் கொண்ட TVS Radeon என்ற இருசக்கர வாகனம் மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்பதை எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபிக்கவில்லை என்பதைக் கருத்தில் கொண்டும், அதற்கான ஆவணங்களை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்திருப்பதாலும், மேற்படி வாகனம் நீதிமன்ற காவலில் இயக்கப்படாமல் இருந்தால் பழுதாகிவிடும் என்று மனுதாரர் வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இருப்பதாலும், மேற்படி மனுதாரர் தரப்பில் மனுதாரரின் சொந்த ஊரான ஊத்துமலையிலிருந்து அவரது அனுமதியில்லாமல் இவ்வழக்கின் எதிரிகள் இருவரும் சாப்பாடு வாங்குவதற்காக மேற்படி வாகனத்தை எடுத்துச் சென்னறதாக தெரிவித்து கூடுதல் அபிடவிட் தாக்கல் செய்துள்ளதைக் கருத்தில் கொண்டும், மேற்படி வாகனத்தை கீழ்க்கண்ட நிபந்தனையின் பேரில் மனுதாரரிடம் இடைக்காலமாக ஒப்படைக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>நிபந்தனைகள் :</u>

1. மனுதாரர் தானும், தனக்காக இரு நபர்களும் தலா ரூ.70,000/-க்கு பிணைமுறி எழுதிக் கொடுக்க வேண்டும்.
2. வாகனத்தின் அசல் ஆர்.சி.புத்தகத்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும்.
3. வாகனத்தை விற்கவோ, உருமாற்றம் செய்யவோ கூடாது.
4. நீதிமன்றம் உத்தரவிடும் நாளிலும், விசாரணையின்போதும் வாகனத்தை தவறாது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும்.
5. வாகனத்தின் நான்கு புறங்களையும் புகைப்படம் எடுத்து புகைப்படத்தையும் அதற்கான சி.டியையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.
6. பஞ்சநாமா தயாரித்து வழக்கு கோப்புடன் இணைத்து வைக்க வேண்டும்.

ஷை நிபந்தனைகளின் கீழ் பி.ஆர்.எண் 101/2026 ல் கண்ட TN 76 AT 0178 என்ற பதிவெண் கொண்ட TVS Radeon என்ற இருசக்கர வாகனத்தை மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைவு செய்து உத்தரவிடப்படுகிறது.

PAVITHRA G

Digitally signed by PAVITHRA G
Date: 2026.03.07 18:12:41 +0530

நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ),

சங்கரன்கோவில்.